செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100
सत्यमेव जयते

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

நடத்தும்

# தமிழக ஓவிய மரபுகள்

## பயிலரங்கம் - 02

(24.04.2024 – 30.04.2024)

## அறிவிப்பும் அழைப்பும்

‘ஓவியம்’ ஏனைய கலை வடிவங்களுள்ளும் ஒப்பற்ற சிறப்புடையது; கலைகளின் அரசனாகப் போற்றப்படுவது. மனித நாகரிகத்தின் மிகத் தொடக்கக் காலத்திலேயே, தன்னைச் சூழ்ந்திருக்கும் பொருள்களின் மீது தனக்கு விருப்பமானவற்றை, இயற்கை வண்ணங்களைக் கொண்டு வரைந்து அவற்றை அழகியல் நிறைந்த கலைப்பொருட்களாக்கியுள்ளான் மனிதன். வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே தான் தங்கியிருந்த இயற்கைக் குகைத்தளங்களில், அன்றாடம் கண்டுணர்ந்தவற்றை இயற்கை வண்ணங்களைக் கொண்டு மனிதன் வரைந்து வைத்திருந்தான்.

வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் அன்றாட வாழ்வில் தான் பயன்படுத்திய பானைகளின் மீது மனிதனது தூரிகை, பல்வேறு வடிவங்களை ஓய்வின்றித் தீட்டியது. மிகவும் தனித்தன்மைகள் கொண்ட அவற்றின் கூறுகள், மனிதக் குழுக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயர்ந்ததை அறிய உதவின.

கட்டடச் சுவர்களில் தீட்டப்பட்டிருந்த ஓவியங்கள் குறித்த சங்க இலக்கியப் பதிவுகள் மிகவும் கவனத்திற்குரியனவாகும். கல்லில் சிலையாக வடித்து வழிபடுவதற்கு முன் தெய்வ உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டி வழிபடப்பட்டதைத் தொல்லியல் சான்றுகள் உணர்த்துகின்றன.

பல்லவர், பாண்டியர் காலத்தில் செழித்த சுவரோவிய மரபு, இராசராச சோழன் காலத்தில் புகழின் உச்சம் தொட்டதைத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் உள்ள உன்னதமான ஓவியங்கள் உணர்த்துகின்றன. பின்னர், ஓர் இடைவெளிக்குப் பிறகு, சுவரோவியக் கலை விஜயநகர – நாயக்கர் காலத்தில் தனித்தன்மைகள் கொண்ட புத்தம் புதிய பண்புக்கூறுகளுடன் எழுச்சி பெற்றது. தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலத்தில் இக்காலக்கட்ட ஓவியங்கள் ஏராளமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தின் வடபகுதியில், குறிப்பாகக் காஞ்சிபுரம், திருப்பருத்திக்குன்றம் போன்ற இடங்களில் உள்ள ஓவியங்கள் குறித்த தகவல்கள் வெளிவந்துள்ளன. மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலிருந்த இக்காலப் பகுதியைச் சேர்ந்த ஓவியங்கள் பெரும்பாலானவை இழக்கப்பட்டுவிட்டன. இருப்பவற்றைப் பேணிக்காப்பது இன்றியமையாததாகும்.

இவற்றின் தேவை உணர்ந்து ‘தமிழக ஓவிய மரபு’ என்ற பயிலரங்கைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நடத்தவுள்ளது. தமிழக ஓவிய மரபின் சிறப்புகளை ஆய்வு மாணவர்களுக்குப் புலப்படுத்தித் தமிழக ஓவிய மரபை வளப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் இப்பயிலரங்கம் நடைபெற உள்ளது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழியல் ஆய்வு சார்ந்த பல்வேறு பயிலரங்குகளை நடத்தியுள்ளது. தற்பொழுது தமிழக ஓவிய மரபுகளை வளப்படுத்தும் வகையில் பயிலரங்கை நடத்த உள்ளது. தமிழக ஓவிய மரபில் புலமை பெற்ற அறிஞர்கள் இப்பயிலரங்கில் உரையாற்ற உள்ளனர். ஓவியங்கள் குறித்து ஆய்வு செய்யும் தமிழியல் மாணவர்களும், ஓவியத் துறை சார்ந்த மாணவர்களும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெறலாம்.

**பயிலரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் பின்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை: 20
2. பயிலரங்கம் நடைபெறும் நாள்கள்: 24.04.2024 முதல் 30.04.2024 முடிய 07 நாள்கள்
3. பயிலரங்கம் நடைபெறும் நேரம்: காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
4. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாள்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
5. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவு, தேநீர் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
6. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழி விண்ணப்பத்தை நிறைவுசெய்து சமர்ப்பிக்க வேண்டும்.
7. இணையவழி விண்ணப்பம் https://forms.gle/bKUoNFqgPBJk6fiT9 என்ற இணைப்பின் வழியாக அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகக் கிடைக்கப்பெறும்.

8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.

9. விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாள்: 19.04.2024.

10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 19.04.2024 அன்று மின்னஞ்சல் / புலனம்மூலமாக அழைப்பாணை அனுப்பிவைக்கப்படும்.

11. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**